விலை: 30/=
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 48
வியாழக்கிழமை
13 ஜனவரி 2022
மார்கழி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2052
பக்கங்கள்: 16

# மக்களின் கஷ்டங்களுக்கு நாமே பொறுப்பாளிகள்!



## ஒத்துக்கொள்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜனவரி 13

இன்று இலங்கையிலுள்ள மக்கள் எதிர்கொண்டுள்ள சிரமங்களுக்கு நாமே பொறுப்பு. எங்களுக்கும் அது தெரியும். ஆனால், இந்த நிலையை நாம் விரும்பி உருவாக்கவில்லை. கொரோனா நெருக்கடிதான், அரசுக்கும் நாட்டுக்கும் இத்தகைய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் மீதும், எங்கள் மீதும் நம்பிக்கையை கைவிடாதீர்கள். 15

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான–

# 5 பேர் விடுதலை!

*2 வருட சிறைவாசம் முடிவு*

கொழும்பு, ஜன. 13

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப் பட்டிருந்த பளை, 15

வெலிக்கடை சிறைக்கலவரம் –

# அத்தியட்சகருக்கு தூக்குத்தண்டனை!

கொழும்பு, ஜன. 13

வெலிக்கடை சிறைக்கலவர வழக்கில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் தலைமைப் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவவை குற்றமற்றவர் எனவிடுதலைசெய்த கொழும்பு மேல் நீதிமன்ற மூவ ரடங்கிய நீதிபதிகள் 15

# வீடு புகுந்து நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 13

நவாலி வடக்கு, மானிப்பாய் பகுதியில் வீடொன்றிலிருந்து பெறும 15



**முச்சந்தி முரளி**

"தாங்கள் தான் பொறுப்பென்டு சொல்லிப் போட்டு இன்னும் மூண்டு வருசத்துக்கும் ஏமாறச் சொல்லுறதுக்கும் ஒரு தில் வேணும் பாருங்கோ"

# ராஜபக்ச அரசு தோற்றுவிட்டது!

## மாற்றத்துக்கு வலுச்சேருங்கள் யாழ்ப்பாணத்தில் சஜித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

தற்போதைய ராஜபக்ச அரசு தோற்றுப்போன அரசு. ஜனாதிபதி, பிரதமர் மட்டுமன்றி அமைச்சர்களும் தோற்று விட்டார்கள். நாடு 15

வவுனியாவில்

# மாணவி மாயம்!

வவுனியா, ஜன. 13

வவுனியாவில் உயர்தரவகுப்பில் கற்கும் மாணவி ஒருவரை காணவில்லை என பொலிஸ் 15

# அலட்சியமான அறுவைச் சிகிச்சை கிருமித்தொற்றுக்குள்ளாகி பெண் சாவு!

- வயிற்றுக்குள் இருந்து 50 செ.மீ. நீளமான துணி மீட்பு
- துணியே சாவுக்குக் காரணம்
- வடமராட்சி தனியார் மருத்துவமனையில் சம்பவம்!!!

யாழ்ப்பாணம், ஜன. 13

வடமராட்சி, நெல்லியடியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில், கர்ப்பப் பையை அகற்றுவதற்காகச் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சையின்போது, தவறுதலாக வயிற்றுக்குள் 50 செ.மீ. நீளமான துணியையும் வைத்து தையல் போடப் பட்டதால், கிருமித் தொற்றுக் குள்ளாகி பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள் ளார். பருத்தித்துறை யாக்கரு பகுதியைச் சேர்ந்த ம னோ ா ன் 15

தேவாலயத்தில் -

# 13 வயதுச் சிறுவனே குண்டுவைத்தான்!

## பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 13

பொரளை,வெலிக்கட பகுதியிலுள்ள தேவாலயமொன்றிலிருந்து கைக்குண்டொன்று 15

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2022
21 22 23
ஜனவரி January
10.00am - 8.00pm
8 இன்னும் நாட்களில்

TRIPLE BLASTER
இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/-
(மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கூச்சலிட்டவர்களே இன்று எதிர்க்கின்றனர்

## மத்திய வங்கியின் ஆளுநர் சீற்றம்

கொழும்பு.ஜன.13

சர்வதேச பிணைமுறிகளுக்கான கொடுப்பனவை மீளச்செலுத்துவதற்கான இயலுமை எமக்கு இல்லை என்று ஆரம்பத்தில் கூச்சலிட்டவர்களே, இன்று அதனைச்செலுத்தக்கூடாது என்று கூச்சலிடுகின்றனர்- இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளதாவது,

எதிர்வரும் 22 ஆம் திகதிக்குள் சர்வதேச பிணைமுறிகளுக்கான கொடுப்பனவை மீளச்செலுத்தக்கூடிய இயலுமை இலங்கைக்கு இல்லை என்று கூச்சலிட்டனர். தற்போது அந்தக் கொடுப்பனவை மீளச்செலுத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்ற போது அதனைச் செலுத்தக்கூடாது என்று கூச்சலிடுகின்றனர்.

2020 ஆம் ஆண்டில் 16.1 பில்லியன் டொலராகக் காணப்பட்ட இலங்கையின் இறக்குமதிகள் 2021 ஆம் ஆண்டில் 21.6 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளன. 2019 ஆம் ஆண்டில் இறக்குமதிகளின் பெறுமதி 19.9 பில்லியன் டொலராகப் பதிவாகியிருந்தன. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டத்தின்கீழ் கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான 5 வருடங்களில் நாட்டுக்குரிய சர்வதேச பிணைமுறிகளின் பெறுமதி 5 பில்லியன் டொலரிலிருந்து, 15 பில்லியன் டொலராக அதிகரித்த போதிலும், அந்தக் காலப்பகுதியில் மொத்தத் தேசிய உற்பத்தி 79 பில்லியன் டொலரிலிருந்து, 84 பில்லியன் டொலராக மாத்திரமே உயர்வடைந்திருந்தது. அதனால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சமநிலையின்மையை உரியவாறு கையாள வேண்டிய நிலைக்குத் தற்போதைய அரசு தள்ளப்பட்டுள்ளது- என்றார். (ஒ-4,இ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்தக் கூட்டம் கொழும்பில்

கொழும்பு.ஜன.13

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்தக் கூட்டம், இந்த முறை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது.

இதில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 68 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் உட்பட மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வருடாந்தக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை வெளிநாட்டு அமைச்சு மேற்கொண்டுள்ளது என்று வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# திவாலாகும் நிலையில் நாடு தற்போது இல்லை

## ஆளுநர் அஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 13

நாடு திவாலாகும் நிலையில் இல்லை என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு திவாலாகும் நிலையில் இல்லை. நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறை மீண்டுவரும். அதற்குரிய அனைத்துத் திட்டங்களும் தயாராகவுள்ளன.

சர்வதேச தரமதிப்பீட்டு நிறுவனங்களால் இலங்கையின் தரம் தாழ்த்தப்பட்டமை வருத்தமளிக்கின்றது. இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.5 வீதமாக இருக்கும். எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் அடுத்த ஒன்பது மாதங்களுக்கான பொருளாதார வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ம)

# போதையில் பிக்கு அட்டகாசம்

கொழும்பு.ஜன.13

போதையில் அநாகரிகமாக நடந்துகொண்ட பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நல்லதண்ணிப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பிக்கு உள்ளிட்ட நால்வர் குருநாகல் பிரதேசத்திலிருந்து. சிவனொளிபாத மலை யாத்திரைக்கு வருகை தந்துள்ளனர்.

பிக்குவிடமிருந்து கஞ்சா பைக்கற் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

பிக்கு உள்ளிட்டவர்கள் பயணித்த காரை பொலிஸார் சோதனையிட்ட போது, காருக்குள்ளிருந்தும் மற்றுமொரு கஞ்சா பைக்கற் மீட்கப்பட்டுள்ளது. அதனையடுத்து வாகனச் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











வடக்குக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உதயன் பணிமனைக்கு நேற்று மதியம் வருகை தந்தார். அவருடன் அவரது பாரியார் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண ஆகியோரும் வருகை தந்தனர். அவர்களை உதயன் குழுமத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் மற்றும் அவரது பாரியார் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் இணைந்து வரவேற்றனர்.

உதயன் பத்திரிகைக்குக் கிடைத்த விருதுகள், உதயன் பத்திரிகை மீது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், சமகால நிலைமை தொடர்பில், உதயன் ஆசிரியர் பீடத்தினருடனும் அவர் கலந்துரையாடினார்.

# வேலையில்லாத் திண்டாட்டம் வடக்கில் தீர்க்கப்படவேண்டும்

## யாழ். மறைமாவட்ட ஆயர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 13

வடக்கில் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென யாழ். மறைமாவட்ட ஆயர் எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



வடக்குக்கு பயணம் மேற்கொண்டுள்ள சஜித் பிரேமதாஸ, யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன் போதே மேற்படி வலியுறுத்தியுள்ளார் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர்.

இது தொடர்பில் ஆயர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் சில விடயங்களை எதிர்க்கட்சித் தலைவரிடம் முக்கியமாகக் குறிப்பிட்டேன். அதாவது கல்வி, மீன்பிடி, விவசாயம் இந்த மூன்று துறைகளையும் வடக்கில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அத்தோடு இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சினை பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றது. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரினேன் - என்றார். (ம-26)



# சஜித் குழுவினர் நல்லூரில் வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜன.13

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தனது பிறந்த நாளை முன்னிட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டார். சஜித் பிரேமதாஸவின் வருகையால் நல்லூர் ஆலயச் சூழலில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஒ-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரும் போகலாம் எவரும் வரலாம்!

## பஸில் திமிர்த்தனம்



**கொழும்பு, ஜன. 13**

**அரசைவிட்டு, எவரும் வெளியேறலாம். அதே போல் வெளியில் இருந்து எவரும் அரசுடன் இணையலாம். அரசின் கதவுகள் திறந்தேயுள்ளன என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.**

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனாத் தொற்றால் நாட்டின் பொருளாதாரத்தை உடனே நிமிர்த்த முடியாது. கடந்த அரசும் எமது அரசிடம் ஆட்சியைக் கையளிக்கும்போது நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச்சியில் இருந்ததை எவரும் மறந்திடலாகாது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னகர்த்தும் நடவடிக்கையில் நிதி அமைச்சு ஈடுபட்டுள்ளது. அரசுக்குள் இருந்து கொண்டு, அரசை விமர்சிப்பவர்கள் உத்தமர்கள் அல்லர். அதேவேளை, அரசை விமர்சிக்கும் எதிரணியினரின் வாய்ச்சவடால்கள் குறித்து பொது மக்கள் நன்கறிவார்கள் - என்றார். (ம)

# மக்கள் செல்வாக்கை இழந்துள்ளது அரசு

## தேர்தல் பிற்போவதும் அதனால்தான் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

இந்த அரசாங்கம் ஆட்சிக்குவந்து ஒரு வருடத்துக்குள்ளேயே தமது செல்வாக்கை முற்றுமுழுதாக இழந்துள்ளது. இதனால்தான் இன்று தேர்தல்கள் அனைத்தையும் பிற்போடுகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

காரைநகர் சலோம் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

எந்தவொரு நாடும் ஜனநாயகத்தை மதிக்கின்ற நாடாக இருந்தால், அந்த நாட்டினுடைய தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்தினுள் நடைபெற வேண்டும். வழமையாக நான்கு வருடம் அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அந்த நாட்டினுடைய கட்டமைப்புக்கு அமைய தேர்தல்கள் மக்களுடைய ஆணையைப்பெற்று நடத்தப்படவேண்டும் என்பதுதான் முறை. ஆனால், எங்களது நாட்டில் தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப்போடுவது என்பது ஒரு சாதாரண விடயமாக இன்று இருக்கிறது. ஏனென்றால் மக்கள் ஆணையைப் பெற்றவர்கள் மக்கள் மத்தியில் த்ங்களது நம்பிக்கையை தக்கவைக்க முடியாத நிலையில்தான் தேர்தலை பிற்போடுகின்றனர் - என்றார். (ம-27)

# மருத்துவ உபகரணங்கள் சீனாவால் நன்கொடை

கொழும்பு.ஜன.13

சீன வெளிவிவகார அமைச்சால், 127 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

சீனத் தூதுவர் கி சென்ஹொங், வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவிடம் உபகரணங்களைக் கையளித்தார்.

தொடர்ந்து, மருந்தக உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எம்.எஸ்.கே. ரத்நாயக்க ஆகியோரிடம் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ஒ-4-இ)

# செட்டிகுளம் பகுதியில் 100 ஏக்கர் காடு அழிப்பு

## திலீபன் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, ஜன. 13


வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் பல நூறு ஏக்கர் காடு அழிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. பொது மக்கள் ஒரு சிறு தடியை வெட்டினால் உடனடியாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வனவளத் திணைக்களத்தினர் இந்த விடயத்தில் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான கு.திலீபன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா - செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் தொடர்ந்து காடுகளை அழித்து, காணி அபகரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன என்று எனக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடு கிடைகின்றது.

இதுதொடர்பில் நான் அந்தப் பகுதிக்கு நேற்றுத் திடீர் விஜயம் மேற்கொண்டேன். இதன்போது பிரதேச செயலர் அனுமதி கொடுத்த 2 ஹெக்ரேயருக்கான கடிதத்துடன் 100 ஏக்கருக்கும் மேல் காடுகள் அழிக்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக இருந்தது.

வவுனியா மாவட்ட செயலர், வனவளத் திணைக்களத்தினர் ஆகியோருக்கு இது தொடர்பான முறைப்பாட்டையும் காணொலியையும் வழங்கியுள்ளேன். பொது மக்கள் இரு தடிகளை வெட்டினாலேயே காடழிப்பு என்ற பெயரில் நடவடிக்கை எடுக்கும் வனவளத் திணைக்களத்தினர், இவ்வாறு பெருமளவு காடழிப்பு நடைபெறுவதை அனுமதிப்பது ஏன்? - என்றார். (ம)



# 140 பண்ணையாளர்களுக்கு பால் சேகரிக்க கொள்கலன்

பண்ணை முறையிலான கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன், 140 பண்ணையாளர்களுக்கு பால் சேகரிக்கும் கொள்கலன்கள் வழங்கப்பட்டன. 'கொய்கா' நிறுவனத்தின் நிதி அனுசரணையில், உலக உணவுத்திட்டம், துணுக்காய் பிரதேச செயலகம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன. (ஒ-4-19)

# நண்பனை விடுவிக்குமாறு பொறுப்பதிகாரி அழுத்தம்

## காணொலியால் பரபரப்பு

கொழும்பு.ஜன.13

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் இமதுவ நுழைவாயிலில், மதுபோதையில் இருந்த சாரதி ஒருவரை விடுவிக்குமாறு பொலிஸ் உத்தியோகத்தருக்கு பொறுப்பதிகாரி அழுத்தம் கொடுக்கும் காணொலி, சமூக ஊடகங்களில் பரவிவருகின்றது. இது தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெளிவுபடுத்தியுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் சோதனைக்காக காரொன்றை நிறுத்தியுள்ளார். அதில் மதுபோதையில் இருந்த சாரதி, இமதுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனது நண்பர் என்று கூறியுள்ளார். அதன்போது தனது நண்பரை விடுவிக்குமாறு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு, இமதுவ பொலிஸ் பொறுப்பதிகாரி பணித்துள்ளார். பொறுப்பதிகாரியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, பொலிஸ் உத்தியோகத்தர் சாரதியை விடுவித்துள்ளார். கடந்த வருடம் ஜூன் மாதம் 4 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைக்குப் பரிந்துரைத்து விசாரணை அறிக்கை ஏற்கனவே சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முறையான விசாரணைகளை மேற்கொண்டு தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பொலிஸ் மா அதிபருக்கு எழுத் [illegible] விடுத்துள்ளார் [illegible] தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் விழா

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில், பொங்கல் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில், பொங்கல் விழா இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1-9)

# தடுப்பூசி ஏற்றல் நாளை நிறுத்தம்

சாவகச்சேரி,ஜன.13

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நாளை மறுதினம் தொடக்கமே பைஸர் மற்றும் சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பணியகத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுவரும் நிலையில், நாளை தைப்பொங்கலை முன்னிட்டு, மறுநாள் சனிக்கிழமை தடுப்பூசிகள் ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

# எனது ஆட்சிக்காக பரிசில் தாருங்கள்!

## கெத்துக்காட்டுகிறார் மைத்திரி



**கொழும்பு, ஜன. 13**

**தற்போதிருப்பதைப் போன்று மோசமான நிலைமைக்கு நாட்டைக் கொண்டுசெல்லாமைக்கு நீங்கள் எனக்குப் பரிசு வழங்கவேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பெல்மடுல்ல பகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாம் கூறும் விடயங்களுக்கு அரசாங்கம் கோபமடையவேண்டிய அவசியம் இல்லை. நாம் உண்மையைப் பேசுகின்றோம். ஐந்து வருடங்களுக்கு ஒன்றரை மாதம் குறைவான காலப் பகுதியே நான் ஜனாதிபதியாக இருந்தேன். இப்படியான பிரச்சினைகளை நான் உருவாக்கவில்லை. எரிவாயுப் பிரச்சினை, உரப்பிரச்சினை இவையெல்லாம் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகள்தான் - என்றார். (ம)

## யாழ்.மாநகர ஏற்பாட்டில் நல்லூரில் முத்தமிழ் விழா


யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா எதிர்வரும் 16ஆம் திகதி காலை 8.30 மணி முதல் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முத்தமிழ் விழா தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பில், மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மேலும் தெரிவிக்கையில்,

காலை தொடக்கம் இரவு வரை இயற்றுறை, இசைத்துறை, நாடகத்துறை என மூன்று அமர்வுகளாக நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது கம்பவாரிதி இ.ஜெயராஜ் குழுவினரின் வழக்காடு மன்றம், பாலமுருகன் மற்றும் குமரனின் நாதசங்கமம், சத்தியவான் சாவித்ரி நாடகம், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகம் உட்பட பல நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன என்று தெரிவித்தார். (த-20)



## வெடித்தது காஸ் அடுப்பு

கிளிநொச்சி,ஜன.13

காலையில் உணவு தயாரித்துக் கொண்டிருக்கையில் திடீரென எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. இந்தச் சம்பவம் கண்டாவளை - புளியம்பொக்கணை முசுரம்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றது.

அடுப்பு வெடித்ததை அடுத்து, வீட்டிலிருந்த அனைவரும் வெளியே ஓடிவந்துள்ளனர். அயலவர்களின் உதவியுடன் பின்னர் அடுப்பின் ரேகுலேட்டரை அகற்றியுள்ளனர். (ஒ-4-113)

## அல்லாரையில் பிடிபட்ட 15 அடி மலைப்பாம்பு

யாழ்ப்பாணம்,ஜன.13



மீசாலை - அல்லாரைக் கிராமத்தில் 15 அடி நீளமான மலைப்பாம்பு ஒன்று நேற்று பிடிக்கப்பட் டுள்ளது.

வீட்டில் சேவல் கத்தும் சத்தத்தைக் கேட்டவர்கள் வெளியில் வந்து பார்த்தபோது, மலைப்பாம்பு சேவலை விழுங்க முற்பட்டுள்ளது.

இதனையடுத்து வீட்டில் இருந்தவர்கள் பெரும் முயற்சி செய்து, பாம்பைப் பிடித்துக் கட்டியுள்ளனர்.

கிராமத்துக்குள் மலைப்பாம்பு புகுந்த சம்பவம் அந்தப் பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ஒ-4-159)

## யுகதனவி விவகாரம்; வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.13

கெவரப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றும் முடிவை இரத்துச் செய்யக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

பிரதம நீதியரசர்களான ஜயந்த ஜயசூரிய, அச்சல வெங்கப்புலி மற்றும் குமுதுனி விக்கிரமசிங்க ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதி எல்.கே. டி. பி. தெஹிதெனிய வழக்கின் விசாரணைக்கு முன்னிலையாகாத காரணத்தால், வழக்கை ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (ஒ-4-இ)




இலங்கையில இருக்கிற இனப்பிரச்சினையால நாங்கள் இஞ்ச கஷ்டப்பட்டாலும், அதை வைச்சு வாழுற ஆக்களும் இருக்கத்தான் செய்யினம். அதிலையும் தமிழகத்தில இருக்கிற சில சினிமாக் கூத்தாடியள் செய்யிற அலப்பறையளைத் தாங்க முடியாது. இயக்கம் ஏதோ தங்களைத்தான் தமிழீழம் பிடிக்க விட்டுட்டுப் போனமாதிரி ஆமைக்கதையில இருந்து இட்டலிக்குள்ள கோழிக்கறி வைச்சு அவிச்ச கதை மட்டும் அவிட்டு விட்டிருக்கினம். அந்தப் பருப்பும் கனபேரிட்ட அவியிறதால, புதிசு புதிசா இப்பிடி தாங்கள்தான் ஈழத் தமிழர்களிண்ட மீட்பர்கள் எண்டுறமாதிரி நாடகங்கள் போட கனபேர் கிளம்பியிருக்கினம்.

இவையள் இப்பிடி நொடிக்குநொடி ஈழம் எண்டு சொல்லுறதால, எங்களுக்கு ஒண்டும் கிடைக்காட்டியும், அவைக்கு எல்லாமே கிடைக்குதாம். குறிப்பா, எங்கட வெளிநாட்டுச் சனங்கள், இவையின்ர ஈழப்பற்றில மயங்கி, தங்கட நாடுகளில நடக்கிற நிகழ்வுகளுக்கு கூப்பிடுகினம். சினிமாவில கிடைக்கிற காசைவிட , இதில கூடக்காசு கிடைக்குதாம். அதுக்காக எல்லாரும் இப்பிடி தங்கட பிழைப்புக்காகத்தான் ஈழத்தை விக்கினம் எண்டில்லை. உண்மையா உணர்வுள்ள ஆக்களும், கலைஞர்களும் இருக்கத்தான் செய்யினம். ஆனால், இப்பிடி காசுக்காக ஈழத்தை வைச்சு யாவாரம் செய்யிறவையால எல்லாருக்குமெல்லோ கெட்ட பேர்.

இப்பிடி ஈழ உணர்வாளர் எண்ட சாயத்துக்குள்ள ஒளிச்சிருந்த ஒரு சினிமா வியாபாரியின்ர உண்மை முகம் வெளிச்சுப் போச்சு. இயக்குநர் இமயம் எண்டு சொல்லப்படுற பாரதிராஜாவை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். நல்ல திறமையான இயக்குநர். கிட்டடியில யாழ்ப்பாணத்துக்கும் வந்தவர். 'பமிலிமான்-2'எண்ட ஒரு வெப்சீரிஸ், அமேசான் ஓடிடி தளத்தில வெளிவந்தது. ஆனால் அதில புலிகளையும், ஈழப்போராட்டத்தையும் கொச்சைப்படுத்துற மாதிரி காட்சியள் இருந்ததால, அதை வெளியிட வேண்டாமெண்டு கடும் எதிர்ப்பு. அந்த நேரத்தில எங்கட இயக்குநர் இமயம் அமேசான் தளத்துக்கு ஒரு எச்சரிக்கையை தன்ர பேஸ்புக், ருவிற்றர் பக்கங்களில பகிரங்கமா விட்டார்.

"ஈழத்தமிழரைக் கொச்சைப்படுத்திற பமிலிமான் -2 வெப்தொடரை அமேசான் வெளியிட்டால், அமேசான் நிறுவனப் பொருள்களை நாங்கள் புறக்கணிப்போம்" எண்டதுதான் அந்த எச்சரிக்கை. ஆனால் அதையும் மீறி அந்த வெப்சீரிஸ் அமேசான் தளத்தில வெளிவந்ததிட்டுது.

அதில பாரதிராஜா சொன்னது சரிதானே எண்டு நீங்கள் யோசிக்கலாம். அவர் அப்பிடிச் சொன்னது சரிதான். ஆனால் அப்பிடிச் சொன்னவர் இப்ப இப்பிடிச் செய்ததுதான் பிழை கண்டியளோ. இப்ப என்ன செய்தவரெண்டு தெரியுமோ? எந்த அமேசான் நிறுவனத்தின்ர பொருள்களைப் புறக்கணிப்பமெண்டு எச்சரிச்சாரோ, அதே அமேசான் நிறுவனத்தின்ர விளம்பரப்படத்தில நடிச்சிருக்கிறார் பாரதிராஜா. காசைக் கண்டவுன தான் போட்ட சபதமெல்லாம் ஆளுக்கு மறந்திட்டு போல. இப்பிடியான ஆக்களைத்தான் இன்னமும் நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறம். ஆனால் அவையெல்லாம் தங்கட ஆதாயத்தோடதான் எல்லாம் செய்யினம்...!



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பஸ்ரியாம்பிள்ளை இம்மானுவேல்



**தோற்றம்** 01.01.1927 **மறைவு** 12.01.2022

கரம்பொன்னை பிறப்பிடமாகவும் 155,4 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பஸ்ரியாம்பிள்ளை இம்மானுவேல் 12.01.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி லெரிசியா (பபா) வின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை மேரி ஜோசப் தம்பதியரின் அன்பு மகனும், பிளேவியன் (பிரான்ஸ்), அம்பிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜகிலா வின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான மாகிறட் ரட்ணம், சூசைப்பிள்ளை, Rev.Father செலஸ்ரீன் மேரி யோசப் மற்றும் சிறில் (U.K), நீட்ரா (கனடா), ஜோச் (கொழும்பு) ராஜேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரைபஸ்ரியாம்பிள்ளை (கனடா) காலஞ்சென்றவர்களான பயஸ், பீற்றர், மேரிஸ்ரெலா ஆகியோரின் மைத்துனரும், மரியதாஸ், ஜேராணி, நிர்மலா, பெனடிக், சோயினி, மேரி ஜேராணி அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (13.01.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**155,4ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**
**077 6333036**

**தகவல் :**
**றெஜி ஐடா குடும்பத்தினர்.**

(CS 1101)1-6

# மரண அறிவித்தல்



## திருமதி கந்தையா செவ்வந்தியம்மா
### (காரைநகர்)

காரைநகர் களபூமி விளானையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் றோட், சிவகுருநாதர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செவ்வந்தியம்மா கடந்த (10.01.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆயுள்வேத வைத்தியர் முத்துக்குமாரு - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையா (CTB) அவர்களின் அன்பு மனைவியும், ஞானசௌந்தரம்மா, காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சரோஜினிதேவி, சுந்தரேஸ்வரன் (France) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலினி (U.K), யாழினி (தேசிய சேமிப்பு வங்கி சிரேஷ்ட வங்கி உத்தியோகத்தர், மானிப்பாய்), நாகேந்திரன் (சட்டத்தரணி- U.K), கமலேந்திரன் (பொறியியலாளர் Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமார் (U.K-Engineer), ஐங்கரன் (சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்), பகீரதி (Engineer, U.K), காயத்திரி (Chemist, Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிஷாந், றுஷாந், லக்ஷிகா, யஸ்விந், தாராதேவி, லக்ஷ்மிகா, அஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2022) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் யாழ். பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**20/3, சிவகுருநாதர் வீதி,**
**பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**021 221 7632**

CS 1102

# பெயர் மாற்றம்

கச்சாய் வீதி, சாவகச்சேரியில் வசிக்கும் **சண்முகநாதன் லதா** ஆகிய நான் எனது பெயரை **சண்முகநாதன் கஸ்தூரி** என மாற்றம் செய்வதுடன் இனிவரும் சகல ஆவணங்களிலும் சண்முகநாதன் கஸ்தூரி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cha 681) (2.6) **சண்முகநாதன் கஸ்தூரி**

# விற்பனைக்கு

ஒரு மணித்தியாலத்திற்கு 1000 L சுத்திகரிக்க கூடிய நீர் சுத்திகரிப்பு இயந்திரம் விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

**077 138 9068,071 167 9729**

# வெங்கலச்செட்டிகுளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) செட்டிகுளம்.

வரையறுக்கப்பட்ட வெங்கலச்செட்டிக்குளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், தொழிற்சாலைகளான பப்படஆலை மற்றும் அரிசிஆலை என்பன ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொழிற்சாலைகளை குத்தகைக்கு பெற்று இயக்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்திற்கு நேரில் வந்து பொதுமுகாமையாளருடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொழிற்சாலைகளை நேரில் பார்வையிடுவதற்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்.**
**வெங்கலச்செட்டிகுளம் பல நோ.கூ.சங்கம் (வ/து),**
**மன்னார் பிரதானவீதி, செட்டிகுளம்.**
T.P.NO **024-2260901**

(cs.0051) (2.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

இலக்கிய விருந்தே...! எங்கையா சென்றீர்கள்?



**தோற்றம்** 05 . 08 . 1952 **மறைவு** 14 . 12 . 2021

பேராசிரியர் வாகீச கலாநிதி

## கனகசபாபதி நாகேஸ்வரன்
### (நயினாதீவு)

எம் அறிவாலயம் ஒன்று மண் மீது மறைந்ததுவோ?
விலைபேசமுடியாத நிலையான கலாநிதியே!
ஈழத்தின் அறுபத்து நான்கு சக்தி பீடங்களின்
ஈடிணையில்லாப் புகழ்மிளிரும் புவனேஸ்வரி பீடமாய் மலரும்
நயினையிலே தணித்தருளும் தாயவளாம் நாகபூசணியின்
நிலையான பரம்பரை அறங்காவலனே!
ஓங்குபுகழ்சமைத்த ஓய்வுநிலை பேராசிரியரானீர்கள்!
ஒப்புயர்வான ஆன்மிகப்பேருரையின் சொத்தே!
தமிழோடு இசைபாடும் தளம்பாத சொல் அழகே!
இங்கிதமான இலக்கிய கலாநிதியே!
நேர்முகவர்ணனையின் கூர்மதியாளனே!
சப்ரகமுவ பல்கலையின் சரித்திரமாய் முகிழ்ந்த
முது நிலைத் தமிழ் விரிவுரையாளனே!
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில்
இலங்கு புகழுடன் திகழ்ந்தீர்கள்
நிதானமான நிகழ்ச்சித்தயாரிப்பாளராக
ஆர்ப்பாட்டமில்லாத அறிவிப்பாளராக
ஈழநாடு பத்திரிகைத் துறையில்
உத்தமமான உதவி ஆசிரியராக
எம் மண்ணும் மக்களும் புகழ்ந்தேத்திடவாழ்ந்த
பல்கலைத் திறன் மிக்க செயற்கரிய செம்மலே!
பண்பாடு தோய்த்த நெஞ்சமே!
புண்பாடில்லாத இதயமே! நாசூக்காக நகைச்சுவைததும்ப இயம்பிடும்
இலக்கிய விருந்தே! எங்கய்யா சென்றீர்கள்?
புன்னகையும் புதுப்பொலிவும்
ஒரு சேர அமைந்த முகம்
அக்கினியின் வாய் பட்டு
இல்லை என ஆகிடுமோ
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**நெடுந்தீவு**

(cs.1079) (2.6)

**திரு.தி.கிருஷ்ணதாஸ்**
**குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"நான் உலகத்தைக் கவனிக்கும்போது அவநம்பிக்கை உடையவனாக இருக்கிறேன். ஆனால், மக்களைப் பார்க்கும்போது எனக்கு நம்பிக்கை இருக்கிறது."
– கார்ல் ரோஜர்ஸ்

## இனியும் ஏன் பின்னடிப்பு...?

நாட்டில் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வரும் நிலையில், கொரோனாத் தடுப்பூசி வாரம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதன்படி நேற்றுமுன்தினம் தொடக்கம் எதிர்வரும் 17ஆம் திகதி வரை நாட்டில் கொரோனாத் தடுப்பூசி வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.


12 வயது தொடக்கம் 19 வயதுடையவர்கள் அனைவருக்கும் முதலாவது தடுப்பூசியையும், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டு தடுப்பூசிகளுடன் பூஸ்டர் தடுப்பூசியையும் பெற்றுக்கொடுப்பது இந்த நடைமுறையின் முதன்மை நோக்கம். கொரோனாப் பெருந்தொற்றின் ஆரம்ப அலைகள் ஏற்படுத்திய சேதத்தை, பொருளாதாரப் பின்னடைவை ஒரு தடவை எண்ணிப் பார்த்தால், இந்த வாரத்தின் கனதித் தன்மையும் காலத் தேவையும் தெரியவரும்.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிரான போரில் தடுப்பூசிகள்தான் முதன்மை ஆயுதங்களாக உள்ளன. இதற்கேற்ற வகையில், கொரோனாவின் முதல் இரண்டு டோஸ்களையும் ஏற்றிக்கொள்வதில் இலங்கையில் மக்கள் ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த ஆர்வம் பூஸ்டர் டோஸைச் செலுத்திக்கொள்வதில் இருக்கின்றதா என்றால் இல்லை என்பதுதான் பதில். அத்துடன் இளைஞர்களின் எதிர்பார்ப்பாக இருந்த பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்குரிய வழிவகைகள் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும்கூட, தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட இளைஞர்களின் சதவீதமும் திருப்திப்படும் வகையில் இல்லை. இத்தகையதொரு பின்னணியில்தான் இந்தத் தடுப்பூசி வாரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது .

நாட்டின் பொருளாதாரம் மீளமுடியாப் பெரும் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. கொரோனாப் பெருந்தொற்றின் முன்னைய அலைகள் ஏற்படுத்திய சேதாரத்தில் இருந்து மீண்டு வருவதற்குரிய வழிவகைகளே இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், இனியுமொரு கொரோனாப் பேரலை ஏற்பட்டால் பொதுமுடக்கத்தையோ அல்லது பகுதியளவான முடக்கத்தையோ நடைமுறைப்படுத்துவதென்பது சாத்தியமற்றதுதான். அதுபோக, பாடசாலைகள், அரசதிணைக்களங்கள், சுற்றுலாத்துறைகள் என்று அனைத்தையும் மீள ஆரம்பித்துச் செயற்படுத்தும் திட்டங்கள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் எமது நலனை – பாதுகாப்பை– உறுதிப்படுத்திக்கொள்ள தடுப்பூசிகளே இன்று பிரதான தெரிவுகளாகவும், தவிர்க்க முடியாத சக்திகளாகவும் இருக்கின்றன.

அனைத்துக்கும் பொத்தம்பொதுவாக அரசைக் குறைசொல்வதை விடுத்து இந்தப் பெருந்தொற்றில் இருந்து மீண்டு வருவதற்கு தடுப்பூசிகளின், பங்களிப்பையும் அதன் காலத்தேவையையும் நாம் விஞ்ஞானபூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நாடு மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பவேண்டுமாயின், நாட்டின் பொருளாதாரத்தையும் தனிநபர் பொருளாதாரத்தையும் மீண்டும் ஓரளவாவது ஏற்றப்பாதையில் கொண்டுசெல்ல வேண்டுமாயின் அதற்கு தடுப்பூசியின் வகிபங்கைச் சிந்தித்து அதைச் செலுத்திக்கொள்வதுதான் எமது சமூகத்துக்கு நாம் செய்யக்கூடிய உயர்ந்தபட்சக் கடமை.

ஆதலால், கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசி வாரத்தின் உச்சபட்சப் பயனை நாமும், எம் சமூகமும், நாடும் அடைந்துகொள்வோம். தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள பின்னடிக்காமல், சகலரும் பொருத்தமான மருத்துவ ஆலோசனைகளுடன் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வோம். அதன்மூலம், நூறு சதவீதம் மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களின் நாடு என்ற சாதனையையும் படைக்கலாம்...!



# குட்டித் தேர்தல் ஒத்திவைப்பு அரசுக்குள்ளேயே புகைச்சல்

கொழும்பு, ஜன. 13

**உள்ளூராட்சி சபைத்தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் முடிவு ஏற்புடையதல்ல என்று அரச பங்காளிக்கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.**

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட மேற்படி கட்சியின் பிரமுகரான நாடாளு மன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்ததாவது:-

உரிய காலப்பகுதிக்குள், உரியவகையில் தேர்தலை நடத்துவதே சிறந்த ஜனநாயகப் பண்பாகும். அந்தவகையில் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதை ஏற்கமுடியாது.

எனினும், விசேட காரணமொன்றுக்காக, அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் குறுகிய காலப்பகுதிக்கு அதனைச் செய்யலாம். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறு செய்வதற்கான தேவை எழவில்லை. அந்தவகையில் சபைகளின் பதவிக் கால நீடிப்பானது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. தேர்தல் நடத்தப்படவேண்டும் - என்றார்.

அதேவேளை, அரச பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தேர்தல் ஒத்திவைப்புக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (ஒ-44)

## உள்ளாட்சித் தேர்தல் பிற்போனமை அரசியல் நோக்கம் கொண்டதா?

*'பவ்ரல்' அமைப்பு கேள்வி*

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டமை அரசியல் உள்நோக்கம் கொண்டதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பு (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றுநோயை காரணம் காட்டி தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் தாமதம் செய்து வருகின்றது. இவ்வாறானதொரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சருக்கு உள்ள உரிமை மற்றும் அதிகாரத்தை பவ்ரல் கேள்விக்குட்படுத்தவில்லை. ஆனால், இவ்வாறானதொரு நடவடிக்கையானது பொதுமக்களின் தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான உரிமையைப் பறிக்கும் விதமாகவே உள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுநோயின் கடுமையான முதல் அலைக்கு மத்தியில் கூட நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. எனவே தாமதத்துக்கு உண்மையான காரணம் நாட்டின் பொருளாதாரமா? அல்லது கொரோனாப் பெருந்தொற்று நிலையா? - என்றார். (ம)

## சமையல் எரிவாயு; வர்த்தமானி வெளியீடு

கொழும்பு,ஜன.13

சமையல் எரிவாயு, கொள்கலன், குழாய் மற்றும் ரெகுலேட்டர்களை தரப்படுத்துவதற்கு, இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்துக்கு அதிகாரமளித்து, விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானியில் நிதியமைச்சர் கைச்சாத்திட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் கடந்த ஒரு மாத காலமாக எரிவாயுக் கொள்கலன்களில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவங்களை அடுத்து, நீதிமன்றில் எரிவாயு நிறுவனங்கள் இணங்கிக்கொண்டமைக்கு அமையவே இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

நாளை
14.01.2022
வெள்ளிக்கிழமை
தை - 01
சுபநேரம் : 06.34 - 08.04
ராகுகாலம் : 11.04 -12.34
தைப்பொங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.13
தனிமையில் இருந்த வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கைதடி ஏ-9 வீதியில் அமைந்துள்ள விநாயகர் திருமண மண்டபத்தின் வெளிப்புறத்தில் இடம்பெற்றுள்ளது.
கெற்பேலி மேற்கு, கெற்பேலியைச் சேர்ந்த 68 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4,159)



# முதலைகள் படையெடுப்பு

## ஒருவர் சாவு

கொழும்பு,ஜன.13
கொழும்பு நகரப்பகுதியின் கடற்கரையை அண்டிய பகுதிகளில் முதலைகள் படையெடுத்துள்ளன.
இந்த நிலையில் தெஹிவளை, ரயில் நிலையத்துக்கு அருகில் முதலை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிஸை மற்றும் காலிமுகத்திடல் உள்ளிட்ட கடற்பகுதிகளில் 2 முதலைகள், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் அவதானிக்கப்பட்டுள்ளன. எனினும், அந்த முதலைகள் இதுவரையில் பிடிபடவில்லை. இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-4,இ)

# அரிசி விலை அதிகரிக்காது



## வர்த்தக அமைச்சர் உறுதி

**கொழும்பு,ஜன.13**

**எந்தக் காரணங்களுக்காகவும் நாட்டரிசி மற்றும் சுப்பிரி சம்பா அரிசி அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யப்பட மாட்டாது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

2 லட்சம் மெற்றிக் தொன் நாட்டரிசியையும், 1 லட்சம் மெற்றிக்தொன் சம்பா அரிசியையும் இறக்குமதி செய்வதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.
மியான்மரிலிருந்து ஒரு லட்சம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
அடுத்த மாதத்துக்குள் அது இலங்கைக்கு வந்துசேரும்.
அத்துடன் அரிசியை தனியார் துறையினூடாக இறக்குமதி செய்வது தொடர்பில் நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.
அரிசியின் விலையை செயற்கையாகவும், அநியாயமாகவும் உயர்த்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது. ஒரு கிலோ நாட்டரிசி 105 ரூபாவுக்கு மேல் இனி விற்பனை செய்ய முடியாது.
தமிழ்,சிங்கள புத்தாண்டுக்குள் ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாவைத் தாண்டும் என்ற சித்தாந்தத்தை அரிசி மாபியாக்கள் உருவாக்கியுள்ளனர்.
அதேவேளை அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு, உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு, பல நிவாரணத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
நிதி அமைச்சரின் நிவாரணப் பொதியின் கீழ், தோட்டப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஒரு கிலோ கோதுமை மா 85 ரூபாவுக்கு வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஒ-4,இ)

# பொங்கல் பொருள்கள் வழங்கல்



கிளிநொச்சி, ஜன. 13
கிளிநொச்சியில் அமைந்துள்ள சின்மயா மிஷன் ஏற்பாட்டில், தைப்பொங்கலை முன்னிட்டு பொருண் மியம் நலிந்த 40 குடும்பங்களுக்கு நேற்றுக் காலை 8 மணிக்கு சின்மயா மிஷன் மண்டபத்தில் பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டன.
குறித்த நிகழ்வில், சின்மயா மிஷன் சிவேந்திர சைத்தன்யா சுவாமிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு பொங்கல் பொருள்களை வழங்கினர். (ஒ-ரி1,113)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 22.01.1932 மறைவு : 25.12.2020

செல்வத்துரை கணேசரட்ணம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - நல்லூர் பிரதேச செயலகம்)
திதி - வைகுண்ட ஏகாதசி

ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ள வரை
உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதை விட்டு நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நந்தாவில் அம்மன் கோவிலடி
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

நினைவுகளுடன்..
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29 | | 12 |
| 09 | | 01 |
| 1929 | | 2022 |



திருமதி நடேசபிள்ளை நல்லம்மா

யாழ் சாவகச்சேரி வேம்பிராயை பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசபிள்ளை நல்லம்மா அவர்கள் நேற்று (12.01.2022) புதன்கிழமை இறைவனடி எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் நடேசபிள்ளை (பொலிஸ் சார்ஜன்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீசாந்தி நிகேதினி, அமரர் ஸ்ரீதரகோபாலன், ஸ்ரீ சாரதாமணி, ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீ நடேஸ்வரன், ஸ்ரீமுரளீதரன் (CEB) ஆயோரின் அன்புத் தாயாரும், அமரர் குழந்தைவேல், மகேந்திரன் (ஓய்வுபெற்ற இ.போ.ச DOA) சிவதர்மசுந்தரம், சிவனேஸ்வரி, மிதிலைச் செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஸ், நிவேதிகா (France), லக்சி, கிரிசன் (German), ஆரூரன் (District Court - Mannar), லாவண்யா (NHDA -Jaffna), கஜேந்திரன், மோகன்யா (Canada), நிறோஜன் சாளினி (Canada), மயூரன் ஜசிந்தா (France), ரஞ்சன் பூர்ணிமா (France), சஞ்சீவ், பால்ராஜ் அஜந்தா (France) தனஞ்சயன் (SLTC Charu) ஜனார்த்தனன் தயாளினி (France), பிரகலாதன் (CEB), பிரமிளா (DS Office -Palai), லவீனா (U.O.S) கிரிசாந்தன் (CEB) ஆகியோரின் பேர்த்தியும், ஆயூர்ஸ், அவனீஸ், ஆயூசா (France) சஸ்வின், கயலி (German), பிறுக்சன், கிருத்திக் (Canada) சுயன், சியானி துபிசன் (France) ஷருனி (France) யாத்ரா (France) பிரணித் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.01.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 2.00 மணியளவில் இடம்பெற்று, வேம்பிராய் இந்து மயானத்தில் தகனக்கிரியை செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9298 476

(CS 1084) 1/6

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஜன.13
யாழ்ப்பாணப் பல்கலைகழக விஞ்ஞானபீட மாணவர் ஒருவர், தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில், விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் தங்கியுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு விடுதிக்குள் நுழைந்த இறுதி வருட சிங்கள மாணவர் ஒருவர், 3 ஆம் வருட சிங்கள மாணவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.
பாதிப்புக்குள்ளான 3 ஆம் வருட மாணவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய இறுதி வருட மாணவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கடந்த ஒரு மாதத்துக்குள் யாழ்ப்பாணப் பல்கலைகழக விஞ்ஞானபீட சிங்கள மாணவர்களுக்கிடையில் நடந்த 3 ஆவது மோதல் சம்பவம் இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 200 மில். ஆண்டுகளில் இலங்கை மாயமாகிவிடும்

## ஆய்வில் தகவல்

**200 மில்லியன் ஆண்டுகளில் இலங்கை மறைந்து புதிய இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாக மாறும் என ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.**

'அமெரிக்கன் ஜெர்னல் அப் சயின்ஸ்' இதழில் உட்ரெக்ட் பல்கலைக்கழக புவியியலாளர் பேராசிரியர் ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார்.

அதில், எமது பூமிக்கு கீழேயுள்ள டெக்டோனிக் தகடுகள் தொடர்ந்து நகர்ந்து வருவதால் அனைத்துக் கண்டங்களும் தொடர்ச்சியாக நகர்ந்துவருகின்றன.

டெக்டோனிக் தகடுகள் மெதுவாக ஆனால் நிச்சயமாக ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு நகர்ந்து வருகின்றன. இதனால் இன்னும் 200 மில்லியன் ஆண்டுகளில், இன்று இருக்கும் இலங்கை மறைந்து புதிய இந்திய துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாக மாறும்.

மேலும் கிழக்கு ஆபிரிக்கா மற்றும் மடகஸ்கர் ஆகியவை இந்தியாவின் மேல் எழும்பும். இது இந்தியாவின் நவீன மேற்குக் கடற்கரையில் நீண்ட மலைத் தொடரை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும், இந்தியாவின் மேற்கு கடற்கரை சோமாலய மலைகளால் மாற்றப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)






## 'சாய்னா மன்னியுங்கள்'

### சித்தார்த் பதிவு

"அன்புள்ள சாய்னா மன்னித்துவிடுங்கள்; நீங்கள் எப்போதுமே சம்பியன் தான்" என நடிகர் சித்தார்த் கூறியுள்ளார். சாய்னா நேவால் மீதான நடிகர் சித்தார்த்தின் ருவிற்றர் பதிவு சர்ச்சையை ஏற்படுத்தியதை அடுத்து, அதற்காக அவர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அதில், "எனது ருவிற்றர் பதிவில் இடம் பெற்ற வார்த்தைகள் நகைச்சுவையானது மட்டுமே, உள்நோக்கம் கொண்டவை அல்ல. ஒரு நகைச்சுவை எவருக்கும் புரியவில்லை என்றால் அது சிறந்த நகைச்சுவை அல்ல. சரியாக புரிந்து கொள்ளப்படாத எனது நகைச்சுவைக்கு மன்னிப்பு கோருகின்றேன். என்னுடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். எப்போதும் நீங்கள் தான் எனது சம்பியன்" என அவர் பதிவிட்டுள்ளார். (ச-இ)

## அடுத்த 4 நாள்களுக்கு மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜன.13

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் அடுத்த 4 நாள்களுக்கு மழைக்கு வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களான புதுச்சேரி, காரைக்காலில் லேசான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது. (ச)

## அமெரிக்கவில் முதன்முறையாக நாணயத்தில் கறுப்பினப் பெண்!

நியூயோர்க், ஜன.13

அமெரிக்காவில் முதன்முறையாக கறுப்பின பெண் ஒருவரின் உருவம் பொறித்த நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்க பெண் கவிஞரும் பிரபல எழுத்தாளருமான மாயா ஏஞ்சலோவின் உருவமே இவ்வாறு நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.




அமெரிக்காவில் ஆரம்பம் முதலே கறுப்பினத்தவர்கள் அடிமையாக நடத்தப்பட்டதை எதிர்த்து பலரும் குரல்கொடுத்து வந்துள்ளனர். அந்த வகையில் நிறவெறிக்கு எதிராக தனது கவிதைகளை ஆயுதமாகப் பயன்படுத்தியவர் பெண் கவிஞர் மாயா ஏஞ்சலா. மேலும் இவர் எழுதிய சுயசரிதை புத்தகத்தில் தனக்கு சிறுவயதில் ஏற்பட்ட பாலியல்வன்கொடுமை மற்றும் அதுசார்ந்த தாக்கம் குறித்து விரிவாகப் பதிவு செய்திருந்தார். இதன் காரணமாக இந்தப் புத்தகம் அமெரிக்காவில் பெரும் அதிர்வலையை உண்டுபண்ணியிருந்தது. இவர் கடந்த 2014ஆம் ஆண்டு தனது 86ஆவது வயதில் காலமானார்.

இந்த நிலையில் மாயா ஏஞ்சலோ நினைவாக அமெரிக்காவில் அவரது உருவப்படம் பொறிக்கப்பட்ட நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்களின் சமூக அந்தஸ்து உயரும். நிதி நிலை மேம்படும். அரசாங்கம் மூலம் இலாபம் ஏற்படும். சேமிப்பு அதிகரிக்கும். அரசு சம்பந்தமான விடயங்களில் இருந்த தடைகள் நீங்கும்.

**இடபம்:** கடினமான வேலைகளைக் கூட எளிதாகச் செய்து முடிப்பீர்கள். நீண்ட நாளாக இருந்துவந்த பிரச்சினை ஒன்று தீரும். வெளியூர்ப் பயணம் சாதகமாக இருக்கும்.

**மிதுனம்:** குழந்தைகளைப் பற்றி இருந்து வந்த கவலை அனைத்தும் தீரும். சிலருக்கு அதிர்ஷ்டம் வரலாம். தந்தைக்கு நன்மை ஏற்படும். சிரமம் ஒன்று நீங்கும்.

**கடகம்:** இத்தனை நாளாக இருந்து வந்த எதிர்ப்பு அகலும். பயணங்கள் சாதகமான பலன் தரும். கடன் அனுமதி கிடைக்கும். எந்த நன்மையும் சற்று நிதானமாகவே நடக்கும். நண்பர் உதவுவார்.

**சிம்மம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. பிரச்சினை ஒன்றிலிருந்து விடுபடுவீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வந்துசேரும். மனக்குழப்பம் அகலும்.

**கன்னி:** விலை உயர்ந்த பொருள்களை வாங்கும்போது எச்சரிக்கை தேவை. பணத்தை பாதுகாப்பாக வைப்பது நல்லது. வீண் பயம் வேண்டாம். தேவையற்ற சந்தேகம் காரணமாக குழப்பம் [illegible]

**துலாம்:** கூடுதலாக பணியாற்றுவதால் பதவி உயர்வு கிடைக்கலாம். பணியிடத்தில் இருப்பவர்களை எதிர்க்க வேண்டாம். யோகமான நாள். வாக்குவாதம், வீண் பேச்சைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**விருச்சிகம்:** வாகனத்தால் ஏற்பட்ட செலவுகள் முடிவுக்கு வரும். தாயார் பற்றிய கவலை தீரும். யாரிடமும் கோபப்பட வேண்டாம். புதிய சொத்துக்கள் வாங்குவது பற்றிய முயற்சி பலிக்கும்.

**தனுசு:** குடும்பத்தில் சிறு சிறு பூசல்கள் ஏற்பட்டு உடன் நீங்கும். மகன், மகளிடம் சற்று நிதானமாகப் பேசுவது [illegible] நிம்மதி உங்கள் [illegible]தான் உள்ளது.

**மகரம்:** கூடுதலாக உழைத்து எந்தவொரு விஷயத்தையும் முடிப்பீர்கள். நல்ல செய்தி ஒன்று வரும். பயணம் செல்ல நேரிடலாம். எதிர்கால நலன் குறித்த சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்:** கூடுதலாக உழைத்தால் முயற்சியில் வெற்றி பெறலாம். உங்களின் நம்பிக்கை வெல்லும் நாள். மகிழ்ச்சி அதிகரிக்கும் நாடு விட்டு நாடு சென்ற உறவினர் பற்றிய கவலை நீங்கும்.

**மீனம்:** புதிய திட்டம் தீட்டுவீர்கள். தொல்லை தந்தவர்கள் விலகுவர். இனிய அனுபவம் ஒன்று ஏற்படும். பண[illegible] கிடைக்கும். வீடு, வாகனம் வாங்குவதில் கூடுதல் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல மேடைக் கலைஞர் **ஏரம்பு சுப்பையாவின்** 100ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா!



## நடனக் கலையின் தவப்புதல்வன்

திருமதி மதிவாணி விக்னராஜா

கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா, யாழ்ப்பாணத்தின் இணுவில் பதியில் 'கலையரசர்' ஏரம்பு, தங்கமுத்து தம்பதியரின் மகனாக 1922ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி பிறந்தார். தனது தந்தையாரான ஏரம்புவிடம் இசை, நடனம் கற்க ஆரம்பித்தார். அந்தக்காலத்தில் பெண்கள் மேடையில் நடிக்கவோ, ஆடல் அளிக்கை செய்யவோ சமூகம் அனுமதிக்காததால் சுப்பையா தானே பெண் வேடம்பூண்டு மேடைகளில் நடித்தும், ஆடல் அளிக்கைகள் செய்தும் வந்தார். 1940ஆம் ஆண்டு தன்னுள் இருந்த கலையை வளர்க்க விளைந்து சுப்பையா தமிழ் நாட்டுக்குச் சென்றார். அங்கு இராமகான சபையினர் இவரது திறமையைக் கண்டு தம் நாடகக் குழுவில் இணைத்துக் கொண்டனர்.

சுப்பையாஇந்தியாவில் திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் பரதநடனக் கலை நுட்பங்களையும், 1946ஆம் ஆண்டுமுதல் 1948ஆம் ஆண்டுவரை குரு கேரபிநாத்திடம் கதகளி ஆடலையும், கிராமிய நடனங்களையும் கற்றுக் கொண்டார். இதன்போது ஜெமினியின் தயாரிப்பில் உருவான சந்திரலேகா, சக்ரதாரி படங்களில் சுப்பையாவின் ஆற்றுகைகள் இடம்பெற்றன.

வி. ஆர். இராசநாயகம் ஆரம்பித்த யாழ்ப்பாண நடனக் கல்லூரியில் இவர் நடனஆசிரியராகப் பணிபுரிந்தார். 1949ஆம் ஆண்டில் கொக்குவில் கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வி பூரணம் என்பவரை வாழ்க்கைத் துணையாக்க அவர் தன் கணவரின் கலைப் பயணத்துக்கு இறுதிவரை பக்கபலமாயிருந்து வந்துள்ளார். எஸ்.பரம், கலையரசு கே.சொர்ணலிங்கம், ஏ.பி. நடராஜா, குமாரசுவாமி, தம்பிரத்தினம், கலைப்புலவர் நவரத்தினம், மகேஸ்வரி நவரத்தினம் முதலானோர் இவரது நடனக் கலைக்கான பணியை முன்னெடுக்க உதவினர். இந்தக் காலத்தில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான நடனப் போட்டிகள் கலைஞரின் ஆக்கத்திறனை, சிந்தனை வீச்சைத் தூண்டிவிட்டன.

1952ஆம் ஆண்டு நடன ஆசிரியராக நியமனம் பெற்று, நெடுந்தீவு மகாவித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, கனகரத்தினம் மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இவர் தனது பரதநடனக் கற்பித்தலைத் தொடர்ந்து, சாதனைகள் பலபடைக்க அவற்றைக் களமாக்கினார்.

1956ஆம் ஆண்டு கொக்குவிலில் 'கலாபவனம்' என்ற கலைக்கூடத்தை ஆரம்பித்தார். இவர் பயிற்றுவித்த அரிவு வெட்டுநடனம், செம்பு, வாள் நடனங்கள் நடனப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. 1956ஆம் ஆண்டு கே.ஆழ்வாப்பிள்ளை இவருக்குத் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தார்..

1959ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற உலகவிவசாயப் பொருள்காட்சி விழாவில் ஆந்திரகிராமிய நடனக் குழுவினருடன் இவர் நடனமாடினார். பொதுப் பணிகளுக்கு நிதிசேகரிக்கும் முகமாகக் கலைநிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார்.

சதீஅகல்யா, சுகன்யா, பாமா விஜயம், ஊர்வசி, குறிஞ்சிக்குமரன், தம்பியர் மூவர், திருவெம்பாவை, பஸ்மாசுரமோகினி, காணி நிலம், காமதகனம், யேசு பிறந்தது, சூடாமணி, பாரிஜாதம் ஆகியநாட்டிய நாடகங்கள் கலைச் செல்வனின் திறனை ஊரறியச் செய்தன.

கலையின் உயர்ந்த விழுமியங்களை அழுத்தி, ஆடல் ஆக்கங்களின் போது பரத நடன மரபுகளின் மூலங்கள் வழுவின்றிப் பின்பற்றப்படவேண்டுமென்பதில் உறுதியாகயிருந்தார்.

இவர் மிகநுட்பமான, கலையழகு நிரம்பிய ஜதிகளைத் தனது பரத ஆற்றுகைகளில் வெளிப்படுத்தினார். கிராமிய நடனங்கள், செவ்வியல் முறையான பரத நாட்டியம் என்ற இரு ஆடல்களின் குறியீடுகளைத் தமது அழகியற் செயற்பாடுகளில் அமைத்தவர் அமரர் ஏரம்பு சுப்பையா என்று பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா குறிப்பிட்டுள்ளார்.

1956ஆம் ஆண்டு குரு கோபிநாத், 'கதகளி, பரதநாட்டியம், பிற கிராமிய நடனங்கள் பற்றிய செய்முறை, சாஸ்திரம் அறிந்து சுப்பையா செயற்படுவது கண்டு மகிழ்ச்சி' என்று வாழ்த்தினார். 1960ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச கலாமன்றம் கலைச் செல்வியின் கலை விழாவில் 'கலைச்செல்வன்' என்ற பட்டம் வழங்கியது. 1973ஆம் ஆண்டு இணுவில் பரமானந்த நூல் நிலையப் பொங்கல் விழாவிலே சபா ஆனந்தர் 'அபிநய அரசகேசரி' என்ற பட்டத்தை வழங்கினார்.

கலைச்செல்வனின் புதல்விகளான கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன், கலாபவனத்திலும், திருமதி நந்தினி ஜெகதீஸ்வரன், திருமதி குமுதினி ஸ்ரீகாந்தன் ஆகியோர் கனடாவிலும், அவர்தம் பேர்த்தி திருமதி தேவந்தி திருநந்தன் நடனத்துறை விரிவுரையாளராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கலைப்பணியைத் தொடர்ந்து ஆற்றுகின்றனர்.



இன்று அவரது 100ஆவது பிறந்த தினத்தில் இந்த நடனப் பேராசானை நினைவுகூர்ந்து, அவர் கலைக்காற்றிய பணிகளை மனதிருத்தி, இளம் சந்ததியினர் இவற்றை அறிய ஆவன செய்து பரதநடனக்கலை உலகுள்ளவரை நிலைத்திருக்க நாம் அனைவரும் இணைவோம்.

---

**தாதியத்தில் ஒப்பற்ற சேவை புரிந்து அண்மையில், இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்ட திருமதி ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளையின் நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# திருமதி ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை



ஆறுமுகம் அன்ரன்போல்

திருமதி ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை 1933ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி ஊர்காவற்றுறை கரம்பன் - நாரந்தனையில் இறைபக்தியும் இறைவிசுவாசமும் நிறைந்த மரியாம்பிள்ளை செபஸ்ரீனா தம்பதியினருக்கு கனிஷ்ட புதல்வியாகப் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ். திருக்குடும்ப கன்னியர்மடத்திலும், உயர்கல்வியை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்திலும் கற்றார். இவர் தனது தொழிற்கல்விக்குரிய ஆரம்பப் பயிற்சியை மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையிலும் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

இவரது தாதியத் தொழிலின் முதலாவது நியமனத்தை கொழும்பு தேசிய மருத்துவமனையில் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து கம்பஹா, இரத்தினபுரி, நீர்கொழும்பு எனப் பல இடங்களில் பணியாற்றினார். இறுதியாக சுமார் 35 வருடங்கள் யாழ்.போதனா மருத்துவமனையில் அனைத்துப் பிரிவுகளிலும் கனிவும் கண்டிப்பும் நிறைந்த பிரதம தாதியாக கடமையாற்றினார்.

நாட்டின் சீரற்ற போர்க்காலத்தில் இடப்பெயர்வுகள் மத்தியில் யாழ். நகரமே குண்டுத் தாக்குதல்களாலும் போரின் கடுமையான பிடியிலும் சிக்கியிருந்த வேளையில் [illegible] செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையின்கீழ் ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை ஆற்றிய பணிகளை எழுதவும், கூறவும் வார்த்தைகளும் இல்லை, வரிகளும் இல்லை.

1987ஆம் ஆண்டு யாழ்.போதனா மருத்துவமனையில் நடைபெற்ற இந்திய அமைதிப்படையின் தாக்குதலின் போது பல பணியாளர்கள் இறந்த அவ்வேளையில் அந்நேரம் அவ்விடத்தில் இருந்தாலும் நூலிழையில் உயிர் தப்பினார். விசேடமாக கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் கல்விகற்ற அருட்சகோதரர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி அவர்களின் பணிவாழ்வுக்கும் உறுதுணையாக நின்றார்.

முதுமைக்காலத்திலும் தன்னிடம் தேவையுடன் நாடி வருவோரை இன்முகத்துடன் வரவேற்று இருகரம் விரித்துப் பணியாற்றினார். மக்களின் அன்பான அழைப்பை தான் வாழும் காலம் வரை தன் செயல்களாலும் சேவைகளாலும் மக்களின் மனதில் நிலை பெற்றுவிட்டார். வாழ்வாங்கு இவ்வுலகில் வாழ்ந்த ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை இன்றிப்படி இறந்தாலும் எமது விருப்பப்படி எம் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் ஆழமாக விதைக்கப்பட்டிருக்கின்றார் என்றால் அது மிகையாகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுப்பொறுப்பை மீறி செயற்பட்டார் பஸில்!

கொழும்பு, ஜன. 13

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அமைச் சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறிச் செயற்பட்டாரென ஆளும் கட்சியின் முக்கியமான அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தெரி வித்துள்ளனர். யுகதனவி மின்உற்பத்தி நிலையம் தொடர்பில் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளின்போது தமது தரப்பு சட்டத்தரணிகள் ஊடாக அமைச்சர்கள் இந்த விடயத்தை நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளனர். ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த எகலஹேவா, அமைச்சர்களின் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். (ம)

## பொங்கல் விழாவும் திருமுறை ஓதலும்

யாழ்ப்பாணம், ஜன.13

வட்டுக்கோட்டை தெக்கனப்பாய் அருள்மிகு கண்ணாகாம்பிகா மற்றும் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் பொங்கல் சிறப்பு பூசைகள் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கும் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு திருமுறை ஓதும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. அடியவர்கள் அனைவரையும் இரண்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையருளைப் பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளது. (ச)



## சங்கிலி அறுக்க முயற்சி

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வீதியில் சென்றவரைத்தாக்கி, அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்றனர். எனினும் அயலவர்கள் அங்கு விரைந்து வந்ததால் கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை கெற்பேலி மேற்கில் இடம்பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான நபர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-4-9)


**இலங்கை மின்சாரசபை**

**உத்துறு ஜனனி மின்னிலைய வளாகத்தினை சுத்திகரிப்புக்கான சேவை சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்**

இலங்கை மின்சாரசபை உத்துறு ஜனனி மின்னிலையத்திற்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் பி.ப 3.00 மணி வரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| பிரதான பொறியியலாளர், | Office of the Deputy General Manager |
| யாழ் ஒளி மின்நிலையம், | Ceylon Electricity Board, |
| இலங்கை மின்சார சபை, | Generation Head Quarters |
| சுன்னாகம். | New Kelani Bridge Road |
| தொ.பே.இல. 021 224 2247/8 | Kolonnawa 10600. \ |
| | Telephone No.0112 423 897 |

01. கேள்விப்பத்திர பெறுமதி (Price of the Bid Document)- ரூபா. 3,000.00
02. கேள்விப்பத்திர பிணை வைப்பு (Value of Bid Bond) - ரூபா. 45,000.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை

Office of the Deputy General Manager
Ceylon Electricity Board
Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa 10600.
Telephone No.0112 423 897 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 09.02.2022 மு.ப 10.00 மணிக்கு Office of the *Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa 10600.* என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 28 . 12 . 1937



மறைவு 25 . 12 . 2020

அமரர்

**திரு.செல்லத்துரை கணேசலிங்கம் (ராசாம்மான்)**

திதி - வைகுண்ட ஏகாதசி

யாழ். வேலணை மேற்கு சிற்பனை 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும். தற்போது கைதடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லத்துரை கணேசலிங்கம் அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி.

எங்கள் குடும்ப விளக்கே
இதயத் துடிப்பின் அருமருந்தே
காலம்செய்த கோலத்தினால்
கணப்பொழுதும் துடிக்கின்றோம்.

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
மனம் ஆறுதல் அடைய மறுக்கின்றது
எங்கள் சிரிப்பைத் தொலைத்து
ஆண்டு ஒன்று ஆனதிப்போ

நீர் எம்மை விட்டுச் சென்றாலும்
இறைவனிடம் ஒன்றிணைந்திடுவீர்!
சொர்க்கம் என்று ஒன்று இருந்தால்
அங்கே நீங்கள் இருப்பீர்கள் !

இந்த மண்ணில் உம்மைப்போல் யார் வருவார்?
எம் துயர் போக்க எண்ணிப் பதைக்கின்றோம்
விண்ணில் தேடுகின்றோம்.!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கைதடி வடக்கு, கைதடி.
தொ.பே.இல: 077 032 4525

குடும்பத்தினர்.

(CS 1107) 1-6



**தவறவிடப்பட்டது**

கடந்த (05.01.2022) அன்று யாழ். பஸ் நிலையத்திற்கு அண்மையில் தர்மலிங்கம் அருணரூபன் என்பவருடைய கனடா நாட்டு கடவுச் சீட்டும், முக்கிய ஆவணங்களும், ஒரு தொகை பணமும் அடங்கிய ஒருகைப்பை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 964 9045**

(CR 5660) 1-6



**பணியாளர் தேவை**

யாழ். வைத்தீஸ்வர சந்தியில் இயங்கும்
நீர் சுத்திகரிப்பு நிலைய
காரியாலயத்திற்கு வாடிக்கையாளர்
சேவை செய்வதற்கு பெண் பணியாளர்கள் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**077 138 9068, 071 167 9729**

(cs.42202) (2.6)



**துயர் பகிர்கின்றோம்**



எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.ஜனதன்
அவர்களின் அன்பு மாமியார்

**குணரட்ணம் செல்லம்மா**

அவர்கள் கடந்த (10.01.2022) திங்கட்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை
திருமதி கமலவேணி சரவணபவானந்தமூர்த்தி
அவர்களின் அன்பு மாமனார்

**சரவணமுத்து வேலுப்பிள்ளை**

கடந்த (05.01.2022) அன்று இறைபதம் அடைந்தார். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: ஆசிரிய நலன்புரிச் சங்கம்
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
உரும்பிராய்.

(cs.1099) (2.6)



**கண்ணீர் அஞ்சலி**

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி உருத்திரா டயானா
அவர்களின் அன்புத் தந்தை

**மரியாம்பிள்ளை அல்பிரட்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(cs.42204) (2.7)



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

தோற்றம் 14.11.1963



மறைவு 14.12.2021

**அமரர் தெய்வேந்திரம் பஞ்சாட்சரம்**

SIO International Recruitment Agency (CEO)

ஆண்டு பிலவ ஆய தமிழ் கார்த்திகை இருபத்தெட்டு
பூண்டு வரு பூர்வபக்க புண்ணிய ஏகாதசி திதிதனில் - நீண்டபுகழ்
பேராளன் தெய்வேந்திரம் பஞ்சாட்சரம்
ஐயப்பன் திருவடிகளைச் சரணடைந்தார்

எங்கள் இறுதி மூச்சு உள்ளவரை
உங்கள் நினைவுகள் எம்முடனே
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

34, நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(cs42142) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 25 • 05 • 1946

உதிர்வு 12 • 01 • 2022

## திரு. அன்ரனி நீக்கிலஸ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், இல.104/4, A.V றோட், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அன்ரனி நீக்கிலஸ் நேற்று (12.01.2022) புதன்கிழமை இறைபாதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்ரனி - றோசலின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி செல்வராணியின் அன்புக் கணவரும், வைலற் (விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), வஜிதா, நிமால் (லண்டன்), விஜிதா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கொண்செற்ரா, தேவராசா, மேனகா, மலக்கியாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பயஸ் மற்றும் யேசுரட்ணம், இராசரட்ணம் (நியூ ஜெயசலா ஸ்ரோர்), செல்வமணி, காலஞ்சென்றவர்களான செல்வரெட்ணம், சர்வேஸ்வரி மற்றும் லீனஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க திருப்பலி இன்று (13.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நாரந்தனை புனித சம்பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 495 5620**

**இல.104/4, A.V றோட்,**
**அரியாலை.**

(cs 42213 (2.6)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 31 • 08 • 1944

இறப்பு 10 • 01 • 2022

## பழனியாண்டி லெட்சுமி

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் நேரத்தில்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்


*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**துயரத்தில் துயருறும் :**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

(cs .1135) (2.6)

# மரண அறிவித்தல்



## சுப்பையாபிள்ளை சுத்தானந்தன்

சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையாபிள்ளை சுத்தானந்தன் நேற்று (12.01.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாபிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி - கனகம்மா தம்பதியரின் மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், ராதிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசெயலகம் - தெல்லிப்பளை), விஜய் ஆனந் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன் (நியூ லலிதாஸ் ஜ்வல்லறி) அவர்களின் மாமனாரும், அத்வஜன், அக்ஷிதா (இந்து ஆரம்ப பாடசாலை), அரன்விஷ்ணு ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற ஞானசேகரம், ஆனந்தசக்தி, திருவளர்செல்வி, விமலாம்பிகை மற்றும் விவேகானந்தன், சச்சிதானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைகால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 42213 (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு • 02 • 03 • 1962

இறப்பு 09 • 01 • 2022

## திருமதி சந்திரமோகன் சுதந்தி

(கச்சேரியடி, யாழ்ப்பாணம் - ஹொலண்ட், நெதர்லாந்து)

இல.36, பாரதி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஹொலண்ட் (நெதர்லாந்து) வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமோகன் சுதந்தி கடந்த (09.01.2022) அன்று நெதர்லாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும்; காலஞ்சென்றவர்களான பரமநாதன் - சிவமகாதேவி தம்பதியரின் பாசமிகு மகளும், சந்திரமோகன் அவர்களின் அன்பு மனைவியும், றாகுலன், தீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தி.ஆனந்தி, ப. அயிலன் (நோர்வே), றொ. முகுந்தி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பே. கோகிலட்சுமி, காலஞ்சென்ற சு. அன்னலட்சுமி மற்றும் இ.மகேந்திரன், இ.அரிச்சந்திரன் (லண்டன்), ரா.சரஸ்வதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (17.01.2022) திங்கட்கிழமை ஹொலண்டில் ஐரோப்பிய நேரம் பி.ப. 5.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**இல.36, பாரதி வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

தொடர்புகளுக்கு: **021 222 7738**
**077 935 2429**

(cs 42203) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 27 . 12 . 1935



அம்பிகை திருவடியில் 18 . 12 . 2018

அமரர் உயர்திரு

### சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு (J.P)

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், முன்னாள் நயினாதீவு நாகபூஷணியம்மன் கோயில் அறங்காவலர் சபை தலைவரும், அகில இலங்கை சமாதான நீதவானும், முன்னாள் மரணவிசாரணை அதிகாரியும்)

**திதி: 13.01.2022**

திருநாமம் எனப் போற்றும் பெருநாமம்
திருவைந்தெழுத்தளித்த ஒரு நாமம்
திருநாவுக்கரசர் தந்த தமிழ்ப் பாட்டை
திசை எட்டும் பரவச் செய்த ஒருநாமம்
பரு வற்ற பாழ்பட்ட மக்கள் தம்மை
பதியாள வைத்து நின்ற பண்பாளர்
திருவுருவின் துணையோடு
- இந்த மண்ணை
துவளாது காத்து நின்ற மா மனிதர்

பசியென்று வந்தோர்க்கு பகிர்ந்தளித்து
புசி யென்று உணவளிக்கும் உத்தமரை
விதி வந்து விரைந்தோடிப் போனாலும்
விண்ணுலகில் பெருவாழ்வு கிடைக்குமையா
நதிவற்றிப் போய்விட்ட மீன்களைப் போல்
நாமிருந்து வருந்துகின்றோம் எம் செய்வோம்
கதியுற்று இருப்போரின் கண்களெல்லாம்
காலமெல்லாம் உமைத்தேடி
- விழித்திருக்கும்.

3 ஆம் வட்டாரம்
நயினாதீவு.

(cs.41907) (2.6)

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 . 12 . 1935



இறப்பு 07 . 01 . 2009

### ஆண்டி முருகையா

**திதி: சொர்க்கவாயில் ஏகாதசி**

அன்புடனும் பண்புடனும் வளர்த்த - எங்கள்
அன்புத் தெய்வமே
நீங்கள் இல்லாத உலகம் என்றும்
இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள்
மலர்ந்த முகத்தை!

(cs 42195) (2.6)

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தியேட்டர் வீதி,
இணுவில்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 . 08 . 1952



மறைவு 14 . 12 . 2021

கடந்த (14.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

பேராசிரியர் வாகீச கலாநிதி

### கனகசபாபதி நாகேஸ்வரன்

(நயினாதீவு)

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து உடன்வந்து ஆறுதல் கூறியும் பலவழிகளிலும் உதவிகள் பல புரிந்தும் வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், மலர் வளையம் வைத்தோர்க்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.82 - 6/1, ஹம்டன் ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு- 6

(cs.1080) (2..6)

**குடும்பத்தினர்**
**077 474 2106**

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 09 . 1938



இறப்பு 11 . 01 . 2022

### செல்லப்பா தர்மலிங்கம் BSc(Cey)

(ஆசிரிய ஆலோசகர் - கொழும்பு பிறைட்டன் நிறுவன முன்னாள் பௌதிக ஆசிரியர், முன்னாள் பௌதிக போதனாசிரியர்- இலங்கை பல்கலைக்கழகம், விரிவுரையாளர்-நைஜீரியா பல்கலைக்கழகம்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை சுவிசுத்தராமவை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாண நகர் இரண்டாம் குறுக்குத்தெருவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தர்மலிங்கம் கடந்த (11.01.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா மங்கையர்க்கரசி தம்பதியரின் அருமைப் புத்திரனும், பண்டிதர் அ. பொன்னுத்துரை-நாகரெத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) யின் அன்புக் கணவரும், Dr. சதாபானு ஜனகனின் (லண்டன்)பாசமிகு தந்தையும், பாலசுந்தரம்பிள்ளை ஜனகனின் (லண்டன்) அன்பு மாமனும், ஜ.ஶ்ரீஸ்கந்தனின் ஆசைப் பேரனும், சிவலோகநாதன், இராஜேஸ்வரி (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரனும், சிவலோகநாதன் (கனடா), யோகேஸ்வரி, சாந்தினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு, கல்யாணசுந்தரம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, Dr.விமலேந்திரன் (கனடா), எந்திரி பாலேந்திரன் (கனடா), திருமதி விமலாதேவி, விஜயகுமார் (கனடா), எந்திரி யோகேந்திரன் (அவுஸ்திரேலியா), ரவீந்திரன் (லண்டன்), புவனேந்திரன் (லண்டன்), திருமதி நிர்மலாதேவி, லோகராஜ் (கனடா) மற்றும் காலஞ்சென்ற வத்ஸலாதேவி ஆகியோரின் மைத்துனரும், செழியன் (கனடா), மேகலா (D.O மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்), Dr.நிரஞ்சன், கேசவன், முரளீதரன் (லண்டன்), சுஜகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் ஆசை ஐயாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் வேலணை இல்லத்தில் 13.01.2022 (வியாழக் கிழமை) ந.ப 12.00 மணியளவில் நடைபெற்று, சாட்டி செம்படவன் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருப்பதி,
வேலணை.

**தகவல்: Dr.சதாபானு ஜனகன்**
**மகள் - மருமகன்**
**தொடர்பு:மேகலா மனோகரன்**
**076 6688 423**

(CS 1094) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 14 . 09 . 1940

விண்ணில் 12 . 01 . 2022



## மனவல் சிலுவைராசா

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனவல் சிலுவைராசா அவர்கள் நேற்று (12.01.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் மனவல் விக்ரோறியா லேஞ்சலினா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மனவல் மரியம்மா தம்பதியரின் மருமகனும், வேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வம் மற்றும் ராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற றதி மற்றும் பிறேமா, ஜோக்குமார் (பிரான்ஸ்) றகு (நோர்வே) ஆகியோரின் சகோதரரும், புறோடி திரேசம்மா, ஏரோணிமுஸ் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான யோண், தேவதாஸ், ராஜேஸ்வரி, புஸ்பராணி மற்றும் பூமணி, றெஜினோல்ட், சின்னராணி, பிரேமன் ஆகியோரின் மைத்துனரும், சூரியகுமாரி, சந்திரகுமாரி (சுவிஸ்,U.K), குவான்ஸ் (ஜேர்மனி), காலஞ்சென்ற கிரு மானி ஜோன்சன், றஜனி (ஜேர்மனி,U.K), ஜன்சன் (சுவிஸ்), பெலிஸ்ரன் (பிரான்ஸ்), அருட்பணி அருள் சுதர்சன் அ.ம.தி (யாழ். போதனா வைத்தியசாலை, ஆன்மீகக் குரு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தன், ஜோசப் குப்றால், எட்மன் ஜோசப், டொறின், நிக்ஷலா, றோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மகுமதி-தீஸ், ரவி-கிருபாளினி (யாழ் போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்), கர்ஷன், துஷாரா, யூடின், மாமதி, றொசிற்றா, தொபியாஷ், ஆகாஷ், மொறிஸ், ஜனனிக்கா, கிருமானி, ஜொஹானா, ஜென்சிக்கா ஆகியோரின் பேரனும், அன்சிக்கா, சிவாணி, மானவ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.01.2022) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 6286 506

(CS 1105) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 08 . 1935

மறைவு 12 . 01 . 2022



## இராமநாதன் சிதம்பரம்

மாதகல் குருக்கள் மடத்தை பிறப்பிடமாகவும் தற்போது காஞ்சிபுரம் மாதகலை வசிப்பிட மாகவும் கொண்ட இராமநாதன் சிதம்பரம் அவர்கள் நேற்று (12.01.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி இராமநாதனின் மனைவியும், காலஞ்சென்ற வர்களான விசுவநாதர் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான சபாபதி மீனாட்சி தம்பதியரின் மருமகளும், கந்தசாமி குணபாக்கியம், வீரசிங்கம் சித்ராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, வீரசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், கணபதிப்பிள்ளை மகேஸ்வரி (பிரான்ஸ்), சிற்றம்பலம், சுப்ரமணியம், இராசரத்தினம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சக்திவேல், சிவஞானவேல் (கனடா), யோகவேல் (ஜேர்மனி), அருள் ஞானவேல் (ஆசிரியர்), அமரர் சிவரஞ்சினி, பபியரசி (கனடா), பவிதரன் (ஜேர்மனி), ஜினிதா, ஹம்சாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெலக்சிகா, லகிசா, ஹர்ஷிதா, தனேஜன், கபிஸ்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2022) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1100) 1/6

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இராமச்சந்திரன் சிவகுமார் (சிவா / மைந்தன்)



அன்னை மடியில் 06.08.1971

ஆண்டவன் அடியில் 24.12.2012

**திதி பூர்வபக்க ஏகாதசி**

தெய்வத்தேவனே தேயாத வானிலவே!
தேடிப் புலம்புகின்றோம் தேம்பி அழுகின்றோம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தி எல்லாம் மறந்திடுமோ...
உன் வார்த்தைகளைத் தேடுகின்றோம்.
வாஞ்சைக்குரியவனே....

செல்வமகராசாவே உன் மாளிகை வெறுமையாக
சோர்ந்துவிட்டோம் நாம் சொல்லியழ வார்த்தையின்றி
நீயற்ற வாழ்வு நீண்ட துன்ப காலம் ஐயா - நாம்
நிம்மதி இழந்தோம் நீண்ட தூரம் போனதெங்கே?

பாசமுடன் நீ வளர்த்த ஆசைமகள் வளர்ந்து-உன்
வழிகாட்டலின்றி வாடி நிற்கின்றாள்
எல்லாம் இருந்தும் ஏதும் அற்றவர்களாக
ஏங்கித் தவிக்கின்றோம் எங்கு ஐயா சென்றுவிட்டாய்!

பாசமானவனே நீ ஓடி மறைந்து இன்றுடன்
ஒன்பது ஆண்டுகள் சென்றதையா
பரிதவிக்கும் அம்மா, மனைவி, பிள்ளை உன்
உடன் பிறப்புக்கள் உறவுகள் எல்லாம்
உன்னைக் காணாது ஏங்கித் தவிக்கின்றார்கள்
எப்போ நீ வருவாய் ஐயா!

உன் ஆத்ம சாந்திக்காக அனுதினம் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

12/02, தொட்டியடி,
விசுவமடு.

குடும்பத்தினர்

(CS 1136) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்கள்...

-இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவின் கடல்சார் கேந்திர நிலையமான கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

துறைமுகங்களை நிர்மாணித்து இந்த நாட்டை கடல்சார் கேந்திர நிலையமாக மாற்றி ஆசியாவின் பலம் வாய்ந்த நாடாக முன்னோக்கி செல்வோம் என்ற நம்பிக்கையை நாம் கைவிடவில்லை. கடந்த காலத்தை அரசாங்கம் திரும்பப் பெற முடியாது. அதற்கு ஏற்றாற்போல் செயற்பட்டால் மாத்திரமே அதனைத் திரும்பபெற முடியும்.

நாம் எதிர்கொண்டுள்ள கசப்பான சூழ்நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை மக்களிடம் இருந்து மறைக்க விரும்பவில்லை.

இன்று இலங்கையிலுள்ள மக்கள் எதிர்கொண்டுள்ள சிரமங்களுக்கு நாமே பொறுப்பு. பொருள்களின் விலையேற்றத்தால் வரிசையில் நிற்பது என்பது சிறந்த விடயமல்ல என மக்கள் நம்மிடம் கூறுகின்றனர். எங்களுக்கும் அது தெரியும். ஆனால் இந்த இந்த நிலையை நாம் விரும்பி உருவாக்கவில்லை. கொரோனா நெருக்கடிதான், அரசுக்கும் நாட்டுக்கும் இத்தகைய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் மீதும், எங்கள்மீதும் நம்பிக்கையை கைவிடாதீர்கள்.

இந்த அரசு தன் வசதியை மாத்திரம் கவனிக்கும் அரசாங்கமாக இருப்பின் நிதி நெருக்கடி நிலவும்போது மக்களுக்கு பல நூறு கோடி ரூபாநிவாரணம் வழங்க முடிவு செய்யாது.

நாம் ஆட்சிக்கு வந்தபோது, ஐ.நா. தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாக உறுதியளித்த நாடாக இலங்கை இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்தப் பிரேரணையிலிருந்து நாம் விலகிக் கொண்டோம். இவற்றின் விளைவுகள் தான் இப்போது வந்து கொண்டிருக்கின்றன. 2015க்குப் பிறகு நாட்டுக்கு என்ன நடந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கடந்து சென்ற இரண்டு வருடங்களை விமர்சனங்களுக்கு அப்பால் விட்டுவிடுவோம். எதிர்காலத்தை நாங்கள் பொறுப்பேற்போம் - என்றார். (த)

## 5 பேர் ...

கிளிநொச்சி, மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 5 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 2019ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டிருந்தனர். பளை மருத்துவமனையின் மருத்துவர் எஸ்.சிவரூபன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவருடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டிலேயே மேற்குறித்த ஐந்து பேரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். எனினும், அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் எந்தவொரு குற்றப் பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்தநிலையில், சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (த-இ)

## ராஜபக்ச அரசு...

சீர்கெட்டுப் போயுள்ளது. எனவே, சிறந்த ஒரு நாட்டை உருவாக்குவதற்கு அனைவரும் எங்களுடன் ஒன்றுபட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்களின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் அரசாங்கமானது மக்களின் அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக செயற்பட வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து பொருள்களைக் கொள்வனவுசெய்து நாட்டு மக்களுக்கு வழங்க முடியாமல் ராஜபக்ச அரசு திண்டாடுகிறது.

தேர்தல் காலத்தில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்து, தற்பொழுது மக்கள் வாழமுடியாதநிலைக்கு அவர்களை அரசாங்கம் தள்ளிவிட்டிருக்கின்றது.

குறிப்பாக உணவு, பானங்களை நாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலை காணப்படுகின்றது. குழந்தைகள், தாய்மாருடைய போசாக்கு மட்டம் குறைந்திருக்கிறது. அவர்களுக்குரிய பால் மா மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் கோத்தாபய அரசு காணப்படுகின்றது. மக்கள் வாழ்வதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது.

வெற்றிகொள்வதற்கு வீர தீரமான அரசு, புத்திசாலித்தனமான அரசு எனக் கூறி வாய்ச்சவாடல்விட்டபோதும் தற்பொழுது அரசு பலமில்லாத அரசாங்கமாக மாறியுள்ளது.

இந்த அரசு முற்றுமுழுதாக பெயிலான அரசாங்கம் என்றுதான் கூறவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக ஒரு பலமான அரசை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும்.

குறிப்பாக நமது ஆட்சியில் இனவாதம் மதவாதம் மற்றும் ஒரு துண்டு நிலம் கூட வேறு நாட்டுக்கு கொடுக்காத சிறந்த ஒரு நாட்டை உருவாக்குவதற்கு அனைவரும் எங்களுடன் ஒன்றுபட வேண்டும் - என்றார். (த-20)

## அலட்சியமான...

மணி குலவீரசிங்கம் (வயது-60) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பெண்ணுக்கு கர்ப்பப்பையில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தது. எனவே அவரது கர்ப்பப்பையை உடனடியாக அகற்றுமாறு அவருக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது.

அதனால் நெல்லியடியிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி பெண்நோயியல் சத்திரசிகிச்சை வல்லுநர் ஒருவரால், குறித்த பெண்ணின் கர்ப்பப்பை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

ஆயினும் இதன்போது குறித்த சத்திரசிகிச்சை நிபுணரும், அவரது குழுவினரும் தவறுதலாக பெண்ணின் வயிற்றுக்குள் , அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்திய 50 செ.மீ. நீளமும், 10 செ.மீ அகலமும் கொண்ட துணியையும் அவரது உடலுக்குள் வைத்து தைத்துவிட்டனர்.

இதனையறியாத குறித்த பெண் அறுவைச் சிகிச்சையின் பின் வீட்டுக்கு சென்றுவிட்டார்.

இந்தநிலையில், அந்தப் பெண்ணுக்கு திடீரென ஏற்பட்ட சுகவீனம் ஏற்பட்டது. உடனடியாக அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அங்கு அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

மந்திகை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் பெண்ணின் சடலம் நேற்று உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன்போது, பெண்ணின் உடலுக்குள் 50 சென்ரிமீற்றர் நீளம் 10 சென்ரிமீற்றர் அகலமுள்ள துணி ஒன்று வைத்து தையலிடப்பட்டமை கண்டறியப்பட்டது. அவரது உயிரிழப்புக்கு அந்தத் துணியால் ஏற்பட்ட கிருமித்தொற்றே காரணம் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, உயிரிழந்த பெண்ணின் சடலத்தை தகனம் செய்யாது புதைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் பணித்தார்.

தவிர, இரு தரப்பினரையும் விசாரணைக்காக பருத்தித்துறை நீதிமன்றில் இன்று முன்னிலையாகுமாறு கூறிய நீதிவான், குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-26)

## 13 வயதுச்...

மீட்கப்பட்டநிலையில், குறித்த தேவாலயத்தில் பணிபுரியும் ஒருவரே சிறுவன் மூலமாக குறித்த கைக்குண்டை அங்கு வைத்துள்ளார் என்று பொலிஸார் கூறியுள்ளனர். சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, கைதான நால்வரில், 56 வயதுடைய மருதானை பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் மேற்கொண்ட நீண்ட விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சந்தேகநபர் சுமார் 16 வருடங்களாக அந்த தேவாலயத்தில் பணியாற்றி வருகின்றார். தேவாலயத்துக்குள் கைக்குண்டை வைப்பதற்காக 13 வயது சிறுவனின் உதவியை பெற்றுக் கொண்டுள்ளார்.

மேலும், கைக்குண்டு தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட சில பொருள்களையும் சந்தேகநபர் தங்கியிருந்த அறையிலிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## வீடுபுகுந்து...

தியான நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ளன என்று வீட்டின் உரிமையாளர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

97ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் 3 ஆயிரம் ரூபா பணமுமே இவ்வாறுதிருடப்பட்டுள்ளன. இதுதொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-125)

## மாணவி...

நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் வசித்துவரும் 18 வயதுடைய மாணவியே காணாமற்போயுள்ளார்.

அவர், தனியார் வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய நிலையில் கடந்த வியாழக்கிழமை காணாமல் போயுள்ளார் என்று பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-18)

## அத்தியட்சகருக்கு...

நீதிபதிகள் அமர்வு, சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் எமில் ரஞ்சன் லமாஹேவாவுக்கு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு விதித்துள்ளது.

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் குறித்த கலவரம் இடம்பெற்றிருந்தது. அதனையடுத்து எட்டு கைதிகளின் மரணம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் முன்னாள் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மற்றும் முன்னாள் சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கை விசா ரிப்பதற்காக மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு ஒன்றை சட்டமா அதிபர் நியமித்தார்.

நீதியரசர்களான கிஹான் குலதுங்க, (தலைவர்) மஞ்சுள திலகரத்ன மற்றும் பிரதீப் ஹெட்டியாராச்சி ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் குறித்த வழக்கு விசாரணை நிறைவில், இந்தத் தீர்ப்பை உறுதி செய்தது.

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் வசமிருந்த சட்டவிரோத மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்களை கைப்பற்றுவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி விசேட நடவடிக்கையை ஆரம்பித்தனர். இந்த நடவடிக்கையின்போது ஏற்பட்ட கலவரத்தில் பல கைதிகள் இறந்தனர், இது பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து அந்த இருவர் மீதும் சட்டமா அதிபர் வழக்குப் பதிவுசெய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

# சாலிய பீரிஸே மீண்டும் தலைவர்

கொழும்பு,ஜன.13

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, சங்கத்தின் செயலாளராக சட்டத்தரணி இசுறு பாலபடுபெந்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இருவரது நியமனங்களும் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனைக் கட்டமைப்பதற்கு சீனாவுடன் மீண்டும் பேச்சு!

### மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 13
இலங்கையின் கடனைக் கட்டமைக்கும் நோக்கத்துக்காக மீண்டும் சீனாவுடன் புதிய கடன் பேச்சு நடத்தப்படும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையின் கடனை கட்டமைக்கும் நோக்கத்துக்காக மீண்டும் சீனாவுடன் புதிய கடன் பேச்சு நடத்தப்படும். புதிய கடனைப் பெற்றுக்கொள்ள பேச்சு நடத்தப்படும். அந்த வடிவத்தில் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு சீனா, இலங்கைக்கு உதவும் என்று ஒரு புரிதல் உள்ளது.
இந்தியாவில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்காக டொலர் வசதியை ஏற்படுத்த இந்தியாவுடன் பேச்சு நடத்தி வருகிறோம்' -என்றார். (ம)

## இன்டர்போல் உதவியுடன் 5 நாள்களில் அறுவர் கைது

கொழும்பு, ஜன.13
சர்வதேசப் பொலிஸ் அமைப்பான இன்டர்போல், இலங்கைப் பொலிஸாருடன் இணைந்து ஆறு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளது.
'ஒப்ரேஷன் ஃப்ளைகேட்சர் II' என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட ஐந்து நாள் நடவடிக்கையின் போது, ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்டர்போலின் தரவுத்தளங்களில் சுமார் ஒரு லட்சத்து 35 ஆயிரம் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் பற்றிய விவரங்கள் உள்ளன என்று அந்த அமைப்பின் பயங்கரவாத எதிர்ப்பு இயக்குநர் கிரிகோரி ஹிண்ட்ஸ் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் பயணிக்கும் தீவிரவாத சந்தேக நபர்களை, கண்டறிவதற்காக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இன்டர்போலுடன் இணைந்த நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிய தலைமை பொலிஸ் பரிசோதகர் லக் ஷ்மன் ராஜகருணா தெரிவித்துள்ளார். (ஒ-4இ)


### தேவை


ரியூசன் சென்ரருக்கு கிளாக் வேலைக்கு தேவை. பெண்கள் மட்டும். யாழ்ப்பாணத்திற்கு அருகாமையில் மட்டும். வேலை நேரம்: 8.30 தொடக்கம் 5.30 வரை. சம்பளம் 13000.00 Rs ஞாயிறு மட்டும் விடுமுறை.
இடம் : யாழ்ப்பாணம். (CS 1103) 1-6

077 2935 265


## திருமணம் செய்வதாகக்கூறி யுவதி மீது கூட்டுவன்புணர்வு

### திக்கம் பகுதியில் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜன. 13
திருமணம் செய்வதாகக்கூறி அழைத்துச் சென்ற 'மிஸ்ட் கோல்' காதலன் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததுடன், அவரது நண்பர்களும் தன்னை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்று 18 வயதான யுவதியொருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அவரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின்படி,
18 வயதான அந்த யுவதிக்கு தொலைபேசியில் தவறான அழைப்பொன்று (மிஸ்ட் கோல்) வந்துள்ளது. அந்த அழைப்பு பின்னர் காதலாக மாறியது. இருவரும் முகம் தெரியாமலே தொலைபேசியில் காதலித்து வந்தனர். தன்னை திருமணம் செய்ய விரும்புவதாக காதலன் கூறியதையடுத்து, நேற்று முன்தினம் முதன்முறையாக இருவரும் சந்தித்துக் கொண்டனர்.
தனது தாயாருடன் பேசுவதற்கு அழைத்துச் செல்வதாக காதலன் கூறியுள்ளார். எனினும் நேற்று முன்தினம் மு.ப. 10 மணியளவில் காதலன் தன்னை அழைத்துக்கொண்டு, திக்கம் பகுதியிலுள்ள பற்றைப் பகுதியொன்றுக்குச் சென்றதாக யுவதி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அங்கு தன்னை பாலியல் பலாத்காரம் செய்த காதலன், தண்ணீர் அருந்திவிட்டு வருவதாகக் கூறி அங்கிருந்து சென்றுள்ளார்.
பின்னர், காதலனின் நண்பர்களெனத் தெரிவித்து அங்கு வந்த 3 பேர், தனது கால்களையும் கைகளையும் அழுத்திப் பிடித்து, வாயைப் பொத்தி, வன்புணர்வுக்கு உட்படுத்தினார்கள். பின்னர் காதலன் அங்கு வந்ததாகவும், தனது கைத் தொலைபேசி, நகைகள், 40 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைப் பறித்துவிட்டு, வீதியோரத்தில் இறக்கி விட்டு சென்று விட்டார்கள் எனவும் யுவதி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.
யுவதி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் திக்கம் பகுதி பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியென்பதால், இந்த முறைப்பாடு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேர் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





## யாழ்ப்பாணம் உள்ளூராட்சி மன்ற சம்மேளனத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம்.ஜன.13
யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின்சம்மேளனத்தின்பொதுக்கூட்டமும், புதிய நிர் வாகத்தெரிவும் நேற்று இடம் பெற்றது.
சம்மேளனத்தின் புதிய தலைவராக வேலணைப் பிரதேசசபையின் உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த், புதிய செயலாளராக வலி.மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் திருமதி ஜெயகாந்தன் துவாரகா, பொருளாளராக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி தயாளராஜன் பௌலினா சுபோஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
சம்மேளனத்தின் உப தலைவராக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி கௌசலா சிவா, உப செயலாளராக யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி சந்திரகுமார் அனுசியா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டன.
இதேவேளை யாழ்.மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப் படுத்தும் 17 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில் தலா ஒவ்வொரு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ.4,20)

## இசைச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 13
மார்கழி சுவர்க்கவாயில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனின் "ஆழ்வார்களும் மாயவனும்" என்ற தெய்வீக இசைச் சொற்பொழிவு, இன்று இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் பக்க வாத்தியத்துடன் நிகழ்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)


### வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
தங்குமிடம் இலவசம்.
தொடர்புகளுக்கு:
076 740 2399
(CS 1110) 1-6

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 39 பரப்புக் காணி 1 1/2, பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்)
ஒரு பரப்பின் விலை 3 லட்சம்.
தொடர்பு: 077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204.
(CS 4221)1-6

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் 17 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம்
பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.




தொடர்பு:
077 814 7389
077 614 7333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.